சித்திரைப் புத்தாண்டு (பிலவ வருடம்) 2021 முழு விபரம் உள்ளே

# சுபீட்சம்

SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 06.04.2021 supeedsam.com supeedsam@gmail.com





## வடக்கு, கிழக்கில்

# பௌத்த தொல்பொருள்களே குவிந்து கிடக்கின்றன

(காந்தன்)

இலங்கையின் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் பௌத்த தொல்பொருள் அடையாளங்களே அதிகள வாக காணப்படுவதாக இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வாய்மூல வினாக்களுக்கான நேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளு மன்ற உறுப்பினர் சார்ல்ஸ் நிர்மலநாதன்,

02 ஆம் பக்கத்தில்...

## ஏப்ரல் வரை ‘உஷ்ணம்’ கடுமை

(ராஜ்)

எதிர்வரும் 10 நாட்களுக்கு சூரியன் இலங்கைக்கு நேராக உச்சம் கொடுக்கவுள்ளது என வளிமண்டலவியல் திணைக் களம் எதிர்வு கூறியுள்ளது.

பருவமழைக்கு இடைப் பட்டகாலங்களில் இது போன்ற வெப்பமான காலநிலை சாத்தியமாகும் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நிலவும் உஷ்ணமான

02 ஆம் பக்கத்தில்...

# விடைபெற்றார் இராயப்பு ஜோசப்

## ஆயிரக்கணக்கான மக்களின் கண்ணீருக்கு மத்தியில் பேராலயத்தில் அடக்கம்



(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மறை மாவட்ட முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் திருவுடல் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் நேற்று திங்கட்கிழமை பெருமளவான மக்களின் கண்ணீருக்கு மத்தியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

02 ஆம் பக்கத்தில்...

## பாம் எண்ணெய் இறக்குமதிக்கு தடை

### ஜனாதிபதி அதிரடி உத்தரவு

(கிரிதிசன்)

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பாம் எண்ணெய் இறக்குமதிக்கு தடை விதிப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி

02 ஆம் பக்கத்தில்...

### வாழைச்சேனை, நாவலடி

## சோதனைச் சாவடி அகற்றப்பட்டது



( எச்.எம்.எம்.பர்ஸான்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவலடியில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ சோதனைச் சாவடிஅகற்றப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

## ஆயரின் சமாதியில் சபதம்

மறைந்த முன்னாள் ஆயர் யோசேப்பு அடிகளாரின் எண்ணப்படி அவருடைய பணிகளை தேசியம், தாயகம்,

02 ஆம் பக்கத்தில்...

## பஸ்களில் மாறுவேடத்தில் அதிகாரி சாரதிகளே அவதானம்

(ராஜ்)



மாறு வேடம் தரித்த பொலிஸ் அதிகாரி ஒருவரை நேற்று முதல் பயணிகள் பஸ்களில் கடமையில்

02 ஆம் பக்கத்தில்...

## முள்ளிவாய்க்காலை கடந்து வந்திருந்தால் வலி புரிந்திருக்கும்

### சுமந்திரனுக்கு பதில்

(கிருபை)

இறுதி யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலை கடந்து வந்திருந்தால் சுமந்திரனுக்கு வலிகள் புரிந்திருக்கும் என வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின்

02 ஆம் பக்கத்தில்...

## சம்மாந்துறை பஸ் டிப்போ விவகாரம்; மீண்டும் இளைஞர்கள் போராட்டம்

(நூருல் ஹுதா உமர், பாறூக் சிஹான், ஐ.எல்.எம். நாஸிம்)

சம்மாந்துறையில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான டிப்போ வேறு இடத்திற்கு மாற்றப்பட உள்ளதாக வெளியான

02 ஆம் பக்கத்தில்...








## ஜெனீவா தீர்மானத்துக்கு எதிராக அணிதிரளுங்கள்

ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக எந்தவொரு கட்சி தொடர்பும் இல்லாமல் நிறைவேற்றிய தீர்மானத்திற்கு நாட்டு மக்கள் அனைவரும் அணிதிரள வேண்டும் என அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர், வரகாகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர் அழைப்பு விடுத்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## மக்களை கொல்பவர்களை விட்டுவைக்காதீர்கள்

### அஸ்கிரிய பீடம்

புற்றுநோய்களைக் கொண்ட தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்த வணிகர்கள் எந்தவிதமான பாகுபாடும் இன்றி தண்டிக்கப்பட வேண்டும் என்று அஸ்கிரிய பீட துணை பதிவாளர் வண.நாரம்பனாவ ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான அறிக்கையை நேற்று மாலை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் சட்டத்துறை பணிப்பாளர் ஹரிகுப்த ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கை ஜனாதிபதியிடம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 15 ஆம் திகதி குறித்த அறிக்கை ஜனாதிபதியிடம் ஒப் படைக்கப்பட விருந்த நிலையில், மேலதிக பரிசீலனைக்காக அமைச்சரவை குழு இரண்டு வார கால அவகாசத்தினை பெற்றிருந்தது.

இதற்கமைய குறித்த அறிக்கை இன்று மாலை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் சட்டத்துறை பணிப்பாளர் ஹரி குப்த ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

## மக்களை கொள்பவர்களை விட்டுவைக்காதீர்கள்...

அத்தகையவர்கள் ஒருபோதும் தங்களைத் தற்காத்துக் கொள்ள முன்வரக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார். பல்வேறு அமைப்புகளும் தனிநபர்களும் நாட்டிற்கு விஷ உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வது குறித்து அவ்வப்போது பிரச்சினைகளை எழுப்பியுள்ளனர்.

ஆனால் இது தொடர்பாக எந்தவொரு அதிகாரத்தில் உள்ளவர்களும் எந்த நடவடிக்கையும் எடுப்பதை நாங்கள் காணவில்லை. அத்தகையவர்களைக் கண்டுபிடித்து முறையாக தண்டிக்க வேண்டும்.

இத்தகைய தவறான செயல்களைச் செய்பவர்கள், தங்கள் தரத்தைப் பொருட்படுத்தாமல் தண்டிக்கப்பட வேண்டும் என்பது இந்த நாட்டில் உள்ள மகா சங்கத்தின் கருத்து. என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜெனீவா தீர்மானத்துக்கு எதிராக அணிதிரளுங்கள்

மேலும் இந்த முக்கியமான சந்தர்ப்பத்தில் நாம் ஒரு நாடாக ஒன்றுபடாதமையினால் தான் எங்களுக்கு எதிரான சக்திகள் பயனடைகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதே வேளை யு.என்.எச்.ஆர்.சி.யில் இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் மற்றும் ஒரு அரசாங்கமாக நாங்கள் அதை எவ்வாறு எதிர்கொண்டோம் என்பது குறித்து பொதுமக்களுக்கு பொதுவான புரிதல் இருக்க வேண்டும் என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் குறிப்பிட்டார்.

அந்தவகையில் சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, எதிர்காலத்தில் மனித உரிமை மீறல்கள் நடக்குமென யு.என்.எச்.ஆர்.சி நம்புகிறது. மேலும் முத்தரப்புப் படைகளை வேட்டையாடுவதற்கும் சர்வதேச நீதிமன்றங்களுக்கு முன்பாக 12.8 மில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலவழிப்பதற்கும் ஒரு தீய திட்டம் நடந்து வருகிறது எனவும் அவர் கூறியுள்ளார்.

கண்டியில் ஊடகங்களுடன் பேசிய அமைச்சர், நாட்டின் எதிர்காலம் குறித்து முடிவுகளை எடுக்க வெளிநாட்டு நிறுவனங்கள் அனுமதிக்கப்படாது எனவும் கூறியுள்ளார்.

மேலும் மனித உரிமைகள் ஆணையாளர் மற்றும் யு.என்.எச்.ஆர்.சி அதிகாரம் குறித்து கவலைகளை எழுப்பிய பேராசிரியர் பீரிஸ், நாட்டின் உள் விவகாரங்களை கட்டுப்படுத்த அனுமதிக்க வேண்டுமா என்பது கேள்விக்குரியது, இதில் சட்டங்களை உருவாக்குதல், அரசியலமைப்பில் திருத்தங்கள், நியமனங்கள், முத்தரப்பு மற்றும் அரசு சேவை, நாடாளுமன்றத்தின் பயன்பாடு என்ன என்று கேள்வி எழுப்பினார்.

இலங்கையைப் பயன்படுத்துவதன் மூலம் ஏனைய நாடுகள், தங்கள் நிகழ்ச்சி நிரல்களை நிறைவேற்றுவதற்கு முற்றுப்புள்ளி வைக்க கட்சி வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல் அனைத்து பிரிவுகளும் ஒன்றுபட வேண்டும் என்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறினார்.

ஐ.நா.விலுள்ள சில நாடுகளின் தலைவர்கள், தேர்தல்களுக்கு புலம்பெயர்ந்தோரின் ஆதரவை வெளிப்படையாக கோரியுள்ளனர். இந்நிலையில் எந்தவொரு அரசியல் கட்சியும் இத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிராக குரல் எழுப்பவில்லை என்றால், அது நாட்டுக்கு எதிரான துரோகத்தின் வடிவமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பாம் எண்ணெய் இறக்குமதிக்கு தடை ஜனாதிபதி...

ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்டுள்ள பாம் எண்ணெய்க் கொள்கலன்களை விடுவிக்க வேண்டாம் என சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதே வேளை, தற்போது நாட்டில் பயிரிடப்பட்டுள்ள பாம் எண்ணெய்யை உற்பத்திசெய்யும் செம்பனை மரங்களைக் கட்டங்கட்டமாக அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது.

COLOMBO SHIPPING SOLUTIONS (PVT) LTD.
Galle Road, Colombo – 06, Sri Lanka.
Tel : +94 112 555 567
Whatsapp: +94 77 1766769
E-mail - ops@colomboshipping.com
web - www.colomboshipping.com



We provides a comprehensive range of shipping, logistics and marine services. With office in Colombo, Galle, Hambantota and Trincomalee, we cover all ports in the country, and handle any type of vessels and cargoes.

Services include:
Ship Agency Operations, Marine Services, Ship supplies, Total Project Logistics, Offshore Support Services, Crew Manning Services and Private Maritime Security Services.



Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57

## விடைபெற்றார் இராயப்பு ஜோசப்



ஆயரின் உடல் கடந்த வெள்ளிக்கிழமை மாலை முதல் ஞாயிற்றுக்கிழமை மாலை வரை மன்னார் ஆயர் இல்லத்தின் சிற்றாலயத்தில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் மன்னார் ஆயர் இல்லத்தில் இருந்து தூய செபஸ்தியார் பேராலயத்திற்கு எடுத்து வரப்பட்டு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து நேற்று மாலை 5.30 மணியளவில் இலங்கையில் உள்ள மறைமாவட்ட ஆயர்களின் இரங்கல் திருப்பலியுடன் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் உடல் ஆலயத்தில் நல்லடக்கம் செய்யப்படது. இதன்போது கொழும்புப் பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையும் கலந்துகொண்டிருந்தார்.

இதேவேளை மன்னார் நகர பகுதியில் ஆயரின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள உருவச்சிலையை மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்ணான்டோ ஆண்டகை திறந்து வைத்தார்.

பாப்பரசரின் பிரதிநிதி இரங்கல் உரையாற்றினார். அத்துடன் கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகையின் செய்தி மற்றும் பிரதமரின் செய்திகள் இங்கு தமிழில் வாசிக்கப்பட்டன.

இதை தொடர்ந்து மறைந்த மன்னார் ஓய்வுநிலை ஆயர் இராயப்பு யோசேப் ஆண்டகையின் திருஉடல் பேராலயத்துக்குள் அமைக்கப்பட்டிருந்த கல்லறைக்குள் மாலை ஐந்து மணியளவில் ஆயர்கள் அருட்பணியாளர்கள் மற்றும் அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள், புடைசூழ நல்லடக்கம் செய்யப்பட்டது.

இதைதொடர்ந்து ஆலயத்துக்குள் அமைக்கப்பட்ட அவரின் கல்லறையை மக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக அனுமதிக்கப்பட்டனர்.

அதேபோல், நேற்று மன்னார் மாவட்டம் முழுவதும் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டதுடன், வியாபார நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு நகரெங்கும் வெறிசோடி காணப்பட்டது.

## பஸ்களில் மாறுவேடத்தில் அதிகாரி ; சாரதிகளே அவதானம்

ஈடுப்படுத்தவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பஸ் சாரதிகள் விடும் தவறுகளை குறித்த அதிகாரி விழிப்புடன் கண்காணிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

விசேடமாக அதிக வேகம், போக்குவரத்தின் போது கையடக்க தொலைபேசிகளைப் பயன்படுத்தல் மற்றும் ஏனைய வீதி போக்குவரத்து விதிகளை மீறுகின்றமை உள்ளிட்ட விடயங்களை அந்த அதிகாரி கண்காணிக்கவுள்ளது.

அவ்வாறு சாரதி ஒருவர் தவறு இழைப்பானாரால் அவர் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுச் செல்லப்படுவார்.

இதேவேளை, கடந்த 24 மணித்தியாலங்களில் சுமார் 7 பேர் விபத்துக்களால் உயிரிழந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அவர்களில் ஐவர் மோட்டார் வண்டி செலுத்துனர்கள் என்பதுடன், ஒருவர் பதசாரி எனவும் மற்றையவர் அண்மையில் ஏற்பட்ட விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்தவர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வாழைச்சேனை, நாவலடி சோதனைச் சாவடி...

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து நாடளாவிய ரீதியில் சோதனைச் சாவடிகள், காவலரண்கள் அமைக்கப்பட்டன.

இந்நிலையில், குறித்த பகுதியில் இயங்கி வந்த சோதனைச் சாவடி அகற்றப்பட்டுள்ளதுடன், வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கும்புறுமூலை இராணுவ சோதனைச் சாவடி தொடர்ந்தும் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஆயரின் சமாதியில் சபதம்

சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தொடர்வோம் என்று சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் இயக்கத்தினர் ஆயரின் சமாதி மீதும் ஆயருக்காக மன்னாரில் திறந்து வைக்கப்பட்ட சிலையின் முன்பாகவும் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

## சம்மாந்துறை பஸ் டிப்போ விவகாரம்; மீண்டும் இளைஞர்கள் போராட்டம்

தகவலையடுத்து அது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்த டிப்போவை அவ்விடத்திலையே நிரந்தரமாக இருக்கச் செய்ய பல கட்ட நடவடிக்கைகள் பலதரப்பினராலும் மேற்கொள்ளப்பட்டிருந்தும் அவை வெற்றியளிக்காமையால் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான டிப்போவை அங்கையே நிரந்தரமாக வைக்குமாறு கோரி சம்மாந்துறை இளைஞர்கள் நேற்று திங்கட்கிழமை அந்த சாலைக்கு அண்மையில் திரண்டு சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த போராட்டத்தில் கலந்து கொண்ட இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் அமீர் அப்னான், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் டாக்டர் ஐ.எல்.ஏ. மஜீத், உட்பட இளைஞர்கள் பலரும் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது, இந்த போராட்டம் வெற்றியளிக்காவிட்டால் சாலைமறியல் போராட்டம் நடத்த உள்ளதாவும், அரசியல்வாதிகள் பலரும் தீர்வுகளை பெற்றுத் தருவதாக எங்களை ஏமாற்றுவதாகவும் அதனால் அவர்களை நம்பாது தொடர்ந்தும் தீர்வு கிட்டும்வரை அவ்விடத்திலையே போராட்டத்தை தொடர உள்ளதாகவும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பிராந்திய பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் அரச உயர்மட்டம் முதல் குறித்த இலாக்காவுக்கு பொறுப்பான அமைச்சர்கள் வரை பேசியிருந்தும் இவ்விடயம் வெற்றியளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## முள்ளிவாய்க்காலை கடந்து வந்திருந்தால் வலி புரிந்திருக்கும்; சுமந்திரனுக்கு பதில்

உறவுகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சியில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது, வடக்கு கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத் தலைவி கனகரஞ்சினி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இனப் படுகொலைக்கான சாட்சியங்கள் போதாது என சர்வதேச நிபுணர்களின் கருத்தைச் சுட்டிக்காட்டி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அண்மையில் ஊடக சந்திப்பில் கருத்துத் தெரித்தமை தொடர்பாக ஊடகவியலாளரின் கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தெரிவிக்கையில்,

குறுகிய காலத்தில் தேசியத்தோடு பயணிக்கின்றவர்களை ஒன்றிணைத்து பேசிக்கொண்டிருந்தோம். அந்தவேளையில் சுமந்திரன் எங்களோடு பேசும்போது எங்களின் உண்மையான தேடல் உள்ளிட்ட விடயங்களை அவருக்குத் தெளிவுபடுத்தியிருந்தோம். ஆனால், அவர் புரிந்துகொண்டும் புரியாதது போல் நடிக்கின்றார். உண்மையிலேயே சுமந்திரன், ஒரு கட்சி சார்ந்தவராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும், ஒரு கட்சியினுடைய பேச்சாளராகவும் இருக்கலாம்.

ஆனால், இறுதி யுத்தத்தின்போது முள்ளிவாய்க்காலைக் கடந்து வந்திருந்தால் எங்களுடைய வலிகளும் ஆதங்கங்களும் அவருக்குப் புரிந்திருக்கும். இதேவேளை, ஏற்கனவே நாங்கள் உண்மைச் சாட்சியங்களை முன்வைத்திருக்கின்றோம். ஆதாரங்களுடன் நாங்கள் ஜெனிவா முற்றத்திலே ஆயிரம் கோவைகளைச் சாட்சியங்களுடன் கொண்டுபோய் ஒப்புவித்திருக்கின்றோம்.

சாட்சியங்களாக அங்கு போய் பேசிக்கொண்டும் இருக்கின்றோம். இந்தளவு தெரிந்துகொண்டும் சரியான ஆதாரங்கள், போர்க்குற்ற ஆதாரங்கள் இல்லையென்று சொல்லப்படுகின்றது. இந்த வேளையிலே சர்வதேசத்திலே இருக்கின்ற பிரதிநிதிகள், அந்தந்த நாட்டுப் பிரதிநிதிகள் எங்களுக்காக அங்கு குரல் கொடுக்கின்றார்கள். சர்வதேசத்தில் இருக்கின்ற எங்கள் உறவுகள் அங்கே குரல் கொடுக்கின்றார்கள். அவர்கள் மற்றவர்களைப்போல் தப்பினோம் பிழைத்தோம் என்று இருந்திருந்தால் இன்று நாங்கள் சர்வதேசத்தில் போய் பேசியிருக்க முடியாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஏப்ரல் வரை 'உஷ்ணம்' கடுமை

காலநிலை ஏப்ரல் மாதம் இறுதி வரை நீடிக்கும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

காற்றின் வேகம் குறைவடைந்தமை உள்ளிட்ட பல காரணிகளால் உஷ்ணமான காலநிலை அதிகரித்துள்ளதாக திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. கடந்த நாட்களில் நாட்டின் பல பகுதிகளில் வெப்பத்தின் அளவு 1 முதல் 3 செல்சியஸ் வரை அதிகரித்ததாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சூரியன் வடதிசை நோக்கி பயணிப்பதன் காரணமாக 14ஆம் திகதி வரை இலங்கைக்கு நேராக உச்சம் கொடுக்கவுள்ளது.

அதேநேரம், மத்திய, சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலையை எதிர்பார்க்கலாமெனவும் அத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதே வேளை, நாட்டின் சில பகுதிகளில் மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இது இவ்வாறிருக்க, உஷ்ணமான காலநிலை காரணமாக சிறுவர்களுக்கு நோய் தொற்று ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளதால் அதிகமாக நீர் அருந்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. போதுமான அளவு தண்ணீர் குடிப்பது உட்பட உடல் வெப்பநிலையைக் கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரப்பட்டுள்ளனர்.

இதேவேளை, காங்கேசன்துறையிலிருந்து புத்தளம், கொழும்பு மற்றும் காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் காற்றானது வடமேற்கு முதல் தென்மேற்கு வரையான திசைகளிலிருந்து வீசக்கூடும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் காற்றானது தென்கிழக்கு முதல் வடகிழக்கு வரையான திசைகளிலிருந்து வீசக்கூடும்.

காற்றின் வேகமானது 3040 கிலோ மீற்றர் வரை காணப்படும். காலியிலிருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக மட்டக்களப்பு வரையான கடற்பரப்புகளிலும் புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசந்துறை வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 5055 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

அத்துடன், கொழும்பிலிருந்து காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாக காணப்படுவதுடன் புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசன் துறை வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாக காணப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கு, கிழக்கில் பௌத்த தொல்பொருள்களே குவிந்து கிடக்கின்றன

தொல்பொருள் ஆய்வுகள் குறித்த கேள்விக்குப் பதிலளிக்கும் போதே, இராஜாங்க அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்த நாட்டின் பெரும்பாலான தொல்பொருள் பகுதிகள் பௌத்த அடையாளங்களைக் கொண்டவை என்பதை மறுக்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களை இலக்கு வைத்து வடக்கு கிழக்கில் தொல்பொருள் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொல்பொருள் ஆய்வுகளை முன்னெடுக்கும் வேளைகளில் பிரதேச செயலகதிற்கோ, அதிகாரிகளுக்கோ அறிவிக்கப்படுவதில்லை. எவ்வாறு இருப்பினும் வடக்கில் விசேட கவனம் செலுத்தி முன் அறிவிப்பு விடுத்து ஆய்வுகளை செய்ய முயற்சிக்கின்றோம்.

இவ்வாறான ஆய்வுகளை முன்னெடுப்பதால் எந்தவொரு சமூகத்திற்கும் நெருக்கடிகள் ஏற்படுவதில்லை.

இவை எந்தவொரு மதம் அல்லது இனம் சார்ந்து எடுக்கும் ஆய்வுகள் அல்ல.

ஆனால், தவறான கருத்துக்களை முன்வைத்து, மக்களிடம் முரண்பாடுகளை ஏற்படுத்தக்கூடாது.

நாட்டின் வரலாற்றை, தொன்மையை ஆய்வு செய்வதில் எந்தவொரு மதத்துடனும் இனத்துடனும் அது நின்றுவிடக்கூடாது. தமிழர்களுக்கும் இதுதான் நாடு, எனவே சகலரதும் வரலாறுகளை ஆராய்வதே எமது நோக்கம் எனவும் இராஜாங்க அமைச்சர் பதிலளித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோறளைப்பற்று மத்தியில் மூன்று மாதத்தில் ஏழு பேருக்கு கொரோனா



(ந.குகதர்சன்)

கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் இவ்வருடம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வரை ஏழு கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.ரி.நஜீப்கான் தெரிவித்தார்.

கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களுடன் நெருங்கிய உறவுகள் மற்றும் முகக்கவசம் அணியாது பயணிப்பவர்களுக்கு மேலெழுவாரியாக சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.ரி.நஜீப்கான் தலைமையில் பி.சி.ஆர். பரிசோதனைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இணங்காணப்பட்ட நிலையில் அவர்களின் நெருங்கிய உறவினர்கள் மற்றும் வீதிகளில் முகக்கவசம் அணியாது சுகாதார விதிமுறைகளை மீறியவர்களை பொலிஸாரின் உதவியுடன் பிடித்து மேலெழுவாரியாக பி.சி.ஆர். பரிசோதனைகள் இடம்பெற்றது. இதன்போது இருபது பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.ரி.நஜீப்கான் தெரிவித்தார்.

குறித்த பி.சி.ஆர். பரிசோதனை நிகழ்வில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எஸ்.நௌபர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், பொலிஸார் ஆகியோர் கலந்து கொண்டதுடன், தொற்று நீக்கிகளும் விசிறப்பட்டது.

## ஈழ மக்களுக்காக குரல் கொடுத்த உன்னதமான மனிதனை இழந்து நிற்கிறோம்





ஈழ மக்களுக்காகவும் இனம் மதம் மொழிக்கு அப்பால் சென்று மனித உயிர்கள் வதைக்கப்படுவதற்கு எதிராகக் குரல் கொடுத்தவர் உன்னதமான மனிதனை ஈழத்தமிழர்கள் இழந்து நிற்கிறார்கள் என ஓய்வுநிலை ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகையின் மறைவு தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட பல்சமய சமாதான ஒன்றியம் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்றியம் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

மன்னார் மாவட்டத்திலே மகத்தான பணியாற்றிய மறை மாவட்ட முன்னாள் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை எம்மை விட்டு சென்று விட்டார் என்ற செய்தி கேட்டு முழு இலங்கை வாழ் பல் இன மக்களும் வேதனையடைகின்றனர். ஈழ மக்கள் வாழ்க்கையில் மாறாத் தடம் பதித்த இவரது சேவை உலக மக்கள் அனைவரினதும் கவனத்தில் ஈர்க்கப்பட்டதே. அது போல முழு ஈழ மக்களுக்காகவும் இனம் மதம் மொழிக்கு அப்பால் சென்று மனித உயிர்கள் வதைக்கப்படுவதற்கு எதிராகக் குரல் கொடுத்தவர்.

மனித சமுதாயத்துக்கே இளைக்கப்படுகின்ற அநீதிக்கெதிராகக் குரல் கொடுத்தவர்.சமாதானத்தை நிலைத்திருக்கச் செய்வதற்குத் தொடர்ந்து பணியாற்றியவர்.

தனித்துவமான இடத்தை மக்கள் மனத்தே கொண்டிருந்தவர். கலாநிதிப் பட்டத்தைப் பெற்றிருந்தாலும் அதனை வெளிக்காட்டாதவர். மனித உரிமைகள் இலங்கையில் மீறப்படாதிருக்க வேண்டும் என்றும் சம நீதியும் சம வளப் பகிர்வும் இலங்கையில் நிலை கொள்ள வேண்டும் என்றும் தமிழ் மக்களின் விடுதலையும், தமிழ் மக்களின் அபிலாசைகளும் அரசினால் நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியவர்.

மேலும் அவர் தனது வாழ்க்கை நடை முறையிலும் வாழ்ந்து காட்டியவர், ஏழை மேல் இரக்கமும் கரிசனையும் கொண்டு மன வலிமையுடனே நடந்தேறிய யுத்தத்திற்கும் குமுறியெழுந்த இரத்தக் குமிழிகளுக்கும் எதிரானவர் தான் என நிருபித்தவர். இவ்வாறான பெருந்தகை எங்களை விட்டுச் சென்றாலும் அன்னாரின் ஆத்மா திருநிலை நின்று எங்களோடு நிலைத்திருக்கும் என்பதே உண்மையாகும்.

## ஆயர் இராயப்பு ஜோசப்பின் இறுதி கிரியைகள் மன்னார் மாவட்டம் முழுமையாக முடங்கியது



(வாஸ் கூஞ்ஞ)

மறைந்த மன்னார் மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயரின் இறுதி கிரிகையை முன்னிட்டு வடக்கு ,கிழக்கு பகுதியில் பூரண துக்க அனுஷ்டானம் மேற்கொள்ளும்படி தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகளால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க நேற்று திங்கள் கிழமை மன்னார் நகரம் முழுமையாக முடங்கியது.

மன்னார் மாவட்டத்தில் ஒருசில உணவகங்கள் தவிர பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன

இலங்கை போக்குவரத்து சபை சேவைகள் தவிர தனியார் போக்குவரத்து சேவைகள் இடம் பெறவில்லை.

அரச திணைக்களங்கள் மற்றும் வங்கிகள் திறந்திருந்தபோதும் பொது மக்களின் வருகை மிக குறைவாகவே காணப்பட்டன. அத்துடன் ஆயரின் திருவுடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக பல கிராமங்களிலிருந்தும் மன்னார் பேராலயத்துக்கு சாரி சாரியாக வந்த மக்கள் வெள்ளத்தைக் காணக்கூடியதாக இருந்தது.



பாடசாலைகளில் தற்பொழுது தவணை பரீட்சைகள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதால் பாடசாலைகளுக்கு மாணவர்கள் சென்றிருந்தனர்.

சுருங்கக்கூறின் மன்னார் மாவட்டத்தில் இயல்பு வாழ்க்கை ஸ்தம்பிதம் அடைந்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

ஆயரின் மறைவையொட்டி மன்னார் நகர் உட்பட சகல இடங்களிலும் கறுப்பு வெள்ளைக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

## 'சில அரசியல் ஊழியர்கள் கல்குடாவுக்கு அநியாயம் செய்து விட்டார்கள்'



(எச்.எம்.எம்.பர்ஸான்)

கடந்த பாராளுமன்ற தேர்தலில் எமது பிரதேசத்தில் இருந்த ஒரு சில அரசியல் ஊழியர்கள் கல்குடாவுக்கு அநியாயம் செய்து விட்டார்கள் என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

ஓட்டமாவடி - மஜ்மா நகர் கிராம அபிவிருத்தி சங்கத்தினரிடம் மின் விளக்குகள் கையளிக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற போது அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்,

சில படித்தவர்கள் இந்த கல்குடா அரசியலுக்கு துரோகம் இழைத்தவர்களில் முதன்மை இடத்தைப் பெறுகிறார்கள்.

தாம் சமூகத்தில் எப்படிப்பட்ட அந்தஸ்தில் இருக்க வேண்டும் என்று தெரியாமல் அவர்கள் இரவு நேரங்களில் அரிசி பேக்குகளை மக்களிடம் கொடுத்து இவ்வாறான துரோக அரசியலை செய்துள்ளனர்.

இவ்வாறு அரசியலைக் காசாக்கிப் போனதன் பலன்தான் முஸ்லிம்களுடைய ஜனாஸாக்கள் எரிக்கப்பட்டது. இந்த நாடு முஸ்லிம்களைப் போட்டு சின்னாபின்னமாக்கியது. இந்த ஆட்சியாளர்கள் முஸ்லிம்களை கேவலப்படுத்தியது. அதேபோன்று இன்னும் முஸ்லிம்களை கேவலப்படுத்தப் போவது. இதற்கெல்லாம் யார் யார் அரிசி பேக்குகள் தூக்கிக் கொடுத்தார்களோ, காசி வாங்கிக் கொடுத்தார்களோ அவர்களெல்லாம் அல்லாஹ்விடத்தில் பதில் சொல்லியே யாக வேண்டும்.

இந்தப் பிரதேசத்தில் நாங்கள் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை செய்துள்ளோம். கடந்த காலங்களில் அரசாங்கம் எங்களுக்கு ஒதுக்கீடு செய்த நிதியிலிருந்து கல்விக்காக நிறைய செலவு செய்துள்ளோம். கிட்டத்தட்ட 80 வீதம் அளவில் நாங்கள் பாடசாலைகளுக்கு கட்டடங்கள் அமைத்துள்ளோம். அதே போன்று இன்னும் பல அபிவிருத்திகளை நாங்கள் செய்துள்ளோம்.

இவ்வாறான வேலைகளை செய்த எங்களுக்குக் அவர் என்ன செய்தார், பெரிதாக என்ன கிழித்துள்ளார் என்ற ஏச்சும், பேச்சும்தான்.

இன்று நமது மக்கள் 10 கிலோ அரிசிக்கும் 2000 ரூபாய் காசிக்கும் தங்களின் வாக்குகளை விற்றுவிட்டனர். அவர்கள் உங்களுக்குத் தந்த காசிம், அரிசிம் உங்களிடம் இப்போதும் உள்ளதா? அதனால் உங்களது பிரச்சினைகள் தீர்ந்துள்ளதா? என்று நீங்கள் சிந்திக்க வேண்டும்.

இனி அடுத்த தேர்தல் ஒன்று வரும்போதுதான் அவர்கள் வந்து உங்களுக்கு அரிசிம், காசிம் தருவார்கள். இப்போதைக்கு அவர்கள் உங்களைக் கண்டுகொள்ள மாட்டார்கள். தேர்தல் ஒன்று வருகின்ற போது அதெற்கென்று டீல் மாஸ்டர்கள் கொஞ்சப் பேர் நமது பிரதேசத்திலிருந்து வருவார்கள் அவர்கள் வந்து அரிசி பேக்குகளை தூக்கிக் கொண்டு அலைந்து திரிவார்கள்.







## மூதூரில் குடிநீர் விநியோகம் தடை

(பொன்ஆனந்தம்)

மூதூர் கிழக்கில் பல பிரதேசங்களில் குடிநீர் விநியோகம் பல நாட்கள் தடைப்பட்டதால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளானதாக முறையிடப்பட்டுள்ளது.

இதேவேளை சம்பூர் வைத்தியசாலையின் நோயாளர்கள் சிரமப்பட்ட நிலையில் தமது கோரிக்கையை ஏற்று நேற்றிரவு நோயாளர்களின் குடி தண்ணீர் தேவையை பூர்த்தி செய்ய தண்ணீர்த் தாங்கி ஒன்றை பிரதேச சபை உறுப்பினர் ஜெகன் தலைமையிலான குழுவின வழங்கியுள்ளனர்.

இதனை பெற்றுத்தந்த பிரியங்கன், ராஜரூபன்(உழவு இயந்திரம்) கம்சன் ஆகியோருக்கும், தண்ணீர் நிரப்ப உதவிய பிரதேச சபை உறுப்பினர் ஜெகன் ஆகியோருக்கும், தா ங்கியை தந்துதவிய மரண சங்கத்தினருக்கும் நன்றி தெரிவிப்பதாக நிர்வாகத்தினர் தெரிவித்தனர் .

## மின்சாரம் தாக்கி இளைஞன் படுகாயம்

( எச்.எம்.எம்.பர்ஸான்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி வர்த்தக நிலையம் ஒன்றில் பணிபுரிந்த 20 வயது இளைஞன் ஒருவருக்கு ஞாயிற்றுக்கிழமை மாலை மின்சாரம் தாக்கியதில் படுகாயமடைந்த நிலையில் இளைஞன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த வர்த்தக நிலையத்தில் மேல் மாடியில் வேலை செய்து கொண்டிருந்த போது இளைஞனின் கையில் இருந்த இரும்புக் குழாய் பிரதான மின் கம்பியில் பட்டதால் இவ் இளைஞனுக்கு மின்சாரம் தாக்கியுள்ளது.

இச் சம்பவத்தில் படுகாயமடைந்த இளைஞன் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரைப் புத்தாண்டு (பிலவ வருடம்) 2021

## 14.04.2021 புதன் அதிகாலை 01.39 மணிக்கு பரணி நட்சத்திர 2 ஆம் பாதத்தில் பிறக்கிறது.

விஷு புண்ணியகாலம்: 13.04.2021 இரவு 9.39 மணி முதல் 14.04.2021 அதிகாலை 05.38 மணி வரை இப் புண்ணிய காலத்தில் மருத்து நீர் (சிரசில் விளாவிலையும் பாதத்தில் கடப்பரிலையும்) வைத்து ஸ்நானம் செய்ய வேண்டும்

### கை விஷேச நேரங்கள்

| | | | |
|---|---|---|---|
| 14.04.2021 | காலை | 09.09- 09.52 | பகல் 02.22 - 04.11 |
| 16.04.2021 | அதிகாலை | 04.16 05.17 | |
| 17.04.2021 | காலை | 07.49 9.00 | மாலை 03.04- 03.59 |

### புத்தாண்டுக்குரிய ஆடைகள்:

நீல, சிவப்பு பட்டாடை அல்லது நீல, சிவப்பு கரையமைந்த பட்டாடை

### சங்கிரம தோஷ நட்சத்திரங்கள்:

அஸ்வின, பரணி, கார்த்திகை (01 ஆம் கால்), பூரம், உத்தரம் (2,3,4 ஆம் கால்கள்) அத்தம், சித்திரை (1,2 ஆம் கால்கள்) பூராடம்

| ராசி | ஆதாயம் | விரயம் | ஆரோக்கியம் | ஆரோக்கியம் இன்மை | சுகம் | துக்கம் |
|---|---|---|---|---|---|---|
| மேடம், விருட்சிகம் | 08 | 14 | 02 | 03 | 03 | 03 |
| ரிஷபம், துலாம் | 02 | 08 | 06 | 04 | 06 | 03 |
| மிதுனம், கன்னி | 05 | 05 | 01 | 01 | 06 | 06 |
| மகரம், கும்பம் | 14 | 14 | 01 | 06 | 03 | 03 |
| தனுசு, மீனம் | 11 | 05 | 06 | 04 | 06 | 03 |
| சிம்மம் | 02 | 14 | 03 | 00 | 03 | 05 |
| கடகம் | 05 | 11 | 05 | 01 | 03 | 03 |

## அனைவருக்கும் இனிய தமிழ் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்


நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோறளைப்பற்று மத்தியில் வர்த்தக நிலையங்கள் பரிசோதனை



(ந.குகதர்சன்)

தேசிய உணவு பாதுகாப்பு வாரத்தினை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் வர்த்தக நிலையங்கள் பரிசோதனை செய்யும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது.

அந்தவகையில் கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் எதிர்வரும் சித்திரை புதுவருடப் பிறப்பு மற்றும் நோன்பு பெருநாளை முன்னிட்டு பொதுமக்களின் பாதுகாப்பு கருதி கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் காணப்படும் வர்த்தக நிலையங்கள் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.ரி.நஜீப்கான் தலைமையில் பரிசோதனை செய்யும் நடவடிக்கை இன்று திங்கட்கிழமை நடைபெற்றது.

இதன்போது வர்த்தக நிலையங்களில் உள்ள பொருட்களின் காலாவதி திகதி மற்றும் தடை செய்யப்பட்ட பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றமை தொடர்பில் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், கொரோனா பாதுகாப்பு தொடர்பில் சுகாதார விதிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும் பரிசோதனை செய்யப்பட்டது.

# மஜ்மா நகர் கிராமத்துக்கு 50 மின்விளக்குகள் கையளிப்பு



(ந.குகதர்சன்)

ஓட்டமாவடி பிரதேசத்திற்குட்பட்ட மஜ்மா நகர் கிராம மக்களின் நன்மைகருதி முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலியின் முயற்சியில் முன்னாள் பிரதியமைச்சர் உசைன் பைலா குடும்பத்தினரால் 50 வீதி மின் விளக்குகள் வழங்கி வைக்கப்பட்டது.

3.5 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பைக் கொண்ட அல் மஜ்மா கிராமம் காடு, வயல் மற்றும் பயிர்ச்செய்கை நிலங்களைக் கொண்டமைந்த பிரதேசமாகும்.வயல் அறுவடை முடிவடைந்ததைத் தொடர்ந்து போதியளவு வெளிச்சமின்மை காரணமாக தினமும் இரவு வேளைகளில் விஷ ஜந்துக்கள், யானைகளின் வருகை அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக உயிராபத்துகளும் சொத்து மற்றும் நிரந்தர நிலப் பயிர்ச்சேதங்களும் ஏற்படுகின்றது. இவ்வாறான நிலைமைகளைக் கருத்திற் கொண்டு அல் மஜ்மா கிராம அபிவிருத்திச் சங்கம் விடுத்த வேண்டுகோளுக்கமைய முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலியின் முயற்சியில் முன்னாள் பிரதியமைச்சர் உசைன் பைலா குடும்பத்தினரால் 50 வீதி மின்விளக்குகள் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

அல் மஜ்மா கிராம அபிவிருத்தி சங்கத்தலைவர் ஏ.எல்.சமீம் தலைமையில் இடம்பெற்ற மின்விளக்குகளைக் கையளிக்கும் குறித்த நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி கலந்து கொண்டார்.

ஏனைய அதிதிகளாக ஓட்டமாவடி பிரதேசசபைத்தவிசாளர் ஏ.எம்.நௌபர், பிரதேசசபை உறுப்பினர்களான எம்.பி.எம். ஜௌபர், ஏ.ஜி.அமீர், ஜெஸ்மின், ஜெமீலா, நபீரா மற்றும் கிராம அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், பள்ளிவாயல் நிருவாகிகள், பொது மக்களும் கலந்து கொண்டனர்.

இவ்வுதவியைப் புரிந்த உசைன் பைலா குடும்பத்தினருக்கும் இப்பிரதேச மக்களின் நன்மை கருதி இதற்கான முயற்சிகளை மேற்கொண்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் மற்றும் நிகழ்வில் கலந்து கொண்ட தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கும் வருகை தந்த அனைவருக்கும் பிரதேச மக்கள் சார்பாக கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் ஏ.எல்.சமீம் நன்றி தெரிவித்தார்.

# விற்பனை கண்காட்சி





மட்டக்களப்பு மாவட்ட தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு நடாத்திய விற்பனை கண்காட்சி நேற்று திங்கட் கிழமை மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

மண்முனை தென்மேற்கு பிரதேச மட்ட உள்ளூர் உற்பத்தியாளர்களை ஒன்றித்து நடாத்திய விற்பனை கண்காட்சி நிகழ்வில் பிரதேச செயலாளர் தெட்சணகௌரி தினேஷ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர், கணக்காளர், உதவி திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட சிறுதொழில் முயற்சி அபிவிருத்திபிரிவு மேற்பார்வை உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ‘மோதல் தீர்வுக் கற்கைகள்’ நூல் வெளியீட்டு நிகழ்வு






(ரக்ஸனா)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீட அரசியல் விஞ்ஞான பேராசிரியர் த.கிருஸ்ணமோகனினால் எழுதப்பட்ட ‘மோதல் தீர்வுக் கற்கைகள்’ ஓர் அறிமுகம் எனும் நூல் கலை கலாசார பீடத்தின் சமூக விஞ்ஞானத் துறை தலைவர் எஸ்.சத்தியசேகர் தலைமையில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் முதலாவதாக நூல் அறிமுகம் இடம் பெற்றதனைத் தொடர்ந்து, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி கலாநிதி கெனடி அவர்களுக்கு பேராசிரியர் குணரெத்தினம் மற்றும் துறைத்தலைவர் எஸ்.சத்தியசேகர் ஆகியோருக்கு நூலின் முதற் பிரதிகள் வழங்கிவைக்கப்பட்டன.

தற்காலத்துக்கு தேவையான பல விடயங்களை உள்ளடக்கிய ஒரு நூலாக குறித்த நூல் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# ‘யாவருக்கும் கழிவறை வசதி’ செயற்றிட்டம் ஆரம்பம்

(வி.ரி.சகாதேவராஜா)




மைன்ட் அப் மன்றத்தின் ஏற்பாட்டிலும் நெறியாள்கையிலும் மக்களின் சுகாதார மற்றும் சுகவாழ்வு மேம்பாட்டுக்கான திட்டங்களின் ஓர் அங்கமான HYGEINEX - யாவருக்கும் கழிவறை வசதி - (Sanitary Latrines for All) செயற்றிட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு செங்காமம் ரொட்டரி கழக கட்டடத்தில் இடம்பெற்றது.

நிகழ்வின் போது, முதற்கட்டமாக ஐந்து கழிவறைகள் நிர்மாணிப்பதற்கான வேலைகள், அல்ஹாஜ் சதக்கத்துல்லா மன்றத்தின் தலைவர் அல்ஹாஜ் எம். எஸ். எம். சப்ராஸ் அவர்களின் அனுசரணையில் தொடங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் மைன்ட்அப் மன்றத்தின் தொடக்கம், பயணம் அதன் செயல்வடிவங்கள் பற்றி மன்றத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரான, தாரிக் அஸீஸ் உரையாற்றினார்.

இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் அவர்கள் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வின் தொடக்கத்தில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். எம்.முஷாரப் அவர்களின் செயற்றிட்டமான மரங்களை வளர்க்கும் மனங்களை வளர்ப்போம் மில்லியன் மரங்கள் செயற்றிட்டத்திற்காக மரங்களும் நடப்பட்டன.

இந்நிகழ்வில், தொழிலதிபர்களான அல்ஹாஜ் எம். எஸ். எம். சப்ராஸ்,அல்ஹாஜ் எம். அபூபக்கர், பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் எம். எச். றஹிம், முன்னாள் பிரதேச சபை தவிசாளர், பிரதேச உறுப்பினர் எம். எஸ்.எம். மர்சூக், வைத்தியர் எம். எம். எம். சமீம், வைத்தியர் எஸ். மிஃப்ரார், சமாதான கற்கை நெறிக்கான நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி எஸ்.எல். றியாஸ், சம்மாந்துறை அ.இ.ம.கா அமைப்பாளர் எம். றனூஸ், உலமாக்கள், நலன்விரும்பிகள் மற்றும் பிரதேச மக்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# நுகர்வுப் பொருட்கள் இறக்குமதி மோசடி; அரசு கடும் நடவடிக்கை எடுப்பது அவசியம் - ரிசாத் பதியுதீன்

(ஹஸ்பர் ஏ ஹலீம்)



மக்களின் நாளாந்த நுகர்வுப் பொருட்களான சீனி மற்றும் தேங்காய் எண்ணெய் ஆகியவற்றின் இறக்குமதியில் இடம் பெற்றதாக நம்பப்படும் மோசடி,துஷ்பிரயோகம் தொடர்பில் அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

கிண்ணியாவில் இடம் பெற்ற மக்கள் காங்கிரஸின் மத்திய குழு உறுப்பினர்களுடனான சந்திப்பின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்;

சீனி மோசடியாளர்களை இனம் கண்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் இவ்விடயம் கோப்புக்கு வந்துள்ளது.

கொள்ளையடித்த பணத்தை மீள அரசுக்கு வழங்க வேண்டும். எண்ணெயில் புற்றுநோய் கலப்படம். இனிமேல் இவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெறக் கூடாது. யாராக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்றார்.

மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு மேலும் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் இலங்கையில் உள்ள மீனவர்கள் இன்று மீன்பிடித்துறையில் மிகவும் பின் அடைந்தவர்களாக குடும்ப வாழ்வாதாரத்தில் முகங் கொடுக்க முடியாது கஸ்டப்படுகின்ற போது வெளிநாட்டு மீனவர்கள் இலங்கையில் வந்து மீன்பிடிப்பதற்கு அனுமதிப்பத்திரம் வழங்குவது என்பது புத்திசாலித்தனமல்ல அதை நாங்கள் வன்மையாக எதிர்க்கிறோம்.

இந்த நாடு நமக்குச் சொந்தமானது எந்த இனமாக இருந்தாலும் மீன் பிடிக்கலாம்.எமது மீனவர்களுக்கே கடலில் மீன்பிடிப் பதற்கு பல தடைகளையும் தடங்களையும் இடர்பாடுகளையும் செய்து கொண்டிருக்கின்ற மீன்பிடி அமைச்சு வெளிநாட்டவர்களுக்கு வழங்குவார்களாயின் அதற்கு எதிராக மீனவர் சமூகத்துடன் சேர்ந்து ஜனநாயக ரீதியில் நடவடிக்கைகளை மேற்கொள்வோம் .இலங்கை மீனவர்கள் யுத்த சூழ் நிலையின் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் வடகிழக்கில் மீண்டும் இவ்வாறான மீனவர்களின் வாழ்வாதாரத்தில் கைவவைக்கக் கூடாது அவர்களது பொருளாதாரத்தினை உயர்த்த வேண்டும் என்றார்.

# தலை மாறிய ‘கிரீடம்’







இலங்கையில் நேற்று அனைத்து ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களின் கவனத்தை ஈர்த்த விடயமாக திருமதி இலங்கை அழகிப் போட்டியில் மகுடம் பறிக்கப்பட்ட சம்பவம் பதிவானது.

அதில் வெற்றியாளராக அறிவிக்கப்பட்ட புஷ்பிகா டி சில்வா விவாகரத்து பெற்றதால் போட்டியிட தகுதியற்றவர் எனக்கூறி அவரது மகுடம் பறிக்கப்பட்டு அடுத்த இடத்திலிருந்தவருக்கு அணிவிக்கப்பட்டு அவர் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டார்.

இதனால் புஷ்பிகா டி சில்வா மிகுந்த ஏமாற்றமடைந்ததுடன், மகுடத்தை அவரது தலையில் இருந்து எடுக்கும் போது அவருக்கு காயம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் இன்று செவ்வாய்க்கிழமை ஒரு ஊடக மாநாட்டைத் தொடர்ந்து மீண்டும் புஷ்பிகா டி சில்வா முடிசூட்டப்படுவார் என்று நிகழ்வு அமைப்பாளர்கள் தெரிவித்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

திருமதி அழகிப்பட்டம் பறிக்கப்பட்டு அந்த இடத்திற்கு புதிய ஒருவர் நியமிக்கப்பட்ட பின்னரும் மீண்டும் புஷ்பிகா டி சில்வா முடிசூட்டப்படுவார் என்ற செய்தி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

உலக திருமதி அழகியான ஜூரியால் இறுதி தருணத்தில் முடிவு மாற்றப்பட்டு புஷ்பிகா டி சில்வாவின் தலையிலிருந்த மகுடத்தை அவரே பறித்துள்ளார்.

இதையடுத்து மேடையில் ஜூரியின் நடவடிக்கை, அவரை ஆதரித்த சுலா பத்மேந்திரா ஆகியோருக்கு எதிராக புஷ்பிகா டி சில்வா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org